# புனித ஜெபமாலை அன்னை ஆலயம்

காஞ்சிரகோடு

## பங்கு வரலாறு

கன்னியாகுமரி மாவட்டம் திருவனந்தபுரம் - நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் மார்த்தாண்டத்திற்கு அருகில் எமது காஞ்சிரகோடு புனித ஜெபமாலை அன்னை ஆலயம் அமைந்துள்ளது.

**தொடக்க காலம்**

1915-ஆம் ஆண்டு முள்ளங்கினாவிளை பங்குத்தந்தையாக பணியாற்றிய அருட்தந்தை. பீட்டர் தாமஸ் OCD காஞ்சிரகோடு மண்ணை தேர்ந்தெடுத்து ஓர் ஓலைக்கூரை ஆலயத்தை அமைத்தார்கள். 1925-ஆம் ஆண்டு அருட்சகோதரி.மார்செல்லாவும் அவருடன் இணைந்த அருட்சகோதரிகள் மற்றும் அன்று இருந்த கிறிஸ்தவ மக்கள் ஆகியோரின் அரிய முயற்சியால் புனித ஜாண் மரிய வியானி பெயரில் ஓலைக்கூரை ஆலயம் மண்சுவர் ஆலயமாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆலயத்திற்கென்று 44 செண்ட் இடம் வாங்கப்பட்டது. இவ்வாலயத்தில் வைத்து மக்களுக்கு கல்வி புகட்டுவதற்காக இரண்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

26-05-1930-ஆம் ஆண்டு கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து, கோட்டாறு தனி மறைமாவட்டமாக உருவானது. முள்ளங்கினாவிளையின் கிளைப்பங்காக செயல்பட்டு வந்த பள்ளியாடி 1931-ஆம் ஆண்டு 7-ம் நாள் தனிப்பங்காக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் முள்ளங்கினாவிளையின் கிளைப்பங்காக செயல்பட்டு வந்த எமது ஆலயம் பள்ளியாடி பங்கின் கிளைப்பங்காக அறிவிக்கப்பட்டது.

1933-ஆம் ஆண்டு ஆலயத்திற்கென்று 1 ஏக்கர் 90 செண்ட் நிலம் வாங்கப்பட்டது. இந்த காலங்களில் அருட்தந்தை.பீட்டர் தாமஸ் அவர்கள் கால்நடையாக நடந்து வந்து மக்களை சந்தித்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்று காஞ்சிரகோடு திருச்சபையை கட்டி எழுப்பினார்கள். இக்கால கட்டத்தில் ஓலைக்கூரையாக இருந்த ஆலயம் தீயினால் எரிந்த நிலையில் அதிலிருந்த கூரியதாசர் என்று மக்களால் அழைக்கப்பட்ட புனித ஜாண் மரிய வியானி சொரூபம் மட்டும் எந்த சேதமும் இன்றி அற்புதமாக காக்கப்பட்டது.

18-01-1934 அன்று காஞ்சிரகோட்டில் ஆலயம் கட்ட மேதகு ஆயர். லாறன்ஸ் பெரைரா அவர்கள் அனுமதி வழங்கினார்கள். பங்கு நிர்வாகத்தினை வழிநடத்திட முடுதம் என்ற பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு திரு.ஆசீர்வாதம் அவர்கள் முடுதமாக செயல்பட்டார்கள்.

இக்கால கட்டத்தில் காஞ்சிரகோடு ஆலயத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒருமுறைதான் திருப்பலி நடைபெற்றது. திருப்பலி இல்லாத நாட்களில் இறைமக்கள் தாய் பங்கான பள்ளியாடி ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலி மற்றும் ஜெப வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள்.

ஆலயத்தை விரிவுபடுத்தி அழகுற அமைக்க விரும்பிய போது இந்தியாவில் ஜெபமாலை அன்னைக்கு ஆலயம் எழுப்ப உதவ வேண்டுமென்று ஆவல் கொண்ட வெளிநாட்டு பெண்மணி ஒருவரின் உதவியாலும், மக்களின் ஒத்துழைப்பாலும் ஜெபமாலை அன்னைக்கு இந்திய கலாச்சார அமைப்பில் ஆலயம் கட்டி எழுப்பப்பட்டு 10-03-1956 அன்று அன்றைய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு.ஆஞ்சிசுவாமி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. ரோட்டின் அருகாமையில் சிறிய குருசடி ஒன்று புனித ஜாண் மரிய வியான்னி பெயரில் கட்டப்பட்டு 23-04-1961 அன்று அர்ச்சிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு 41 நாட்கள் பாடப்படும் பஜனை சிறப்பு மிக்கதாகும். அதில் புனித ஜாண் மரிய வியானியைப் பற்றி முன்னோர்களால் புனையப்பட்ட பாடல் இன்றும் நிலைத்து நிற்கிறது.

1966 - ஆம் ஆண்டு ஆலய சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டது. ஓட்டுக்கூரையுடன் கூடிய பங்குதந்தை இல்லம் கட்டப்பட்டது.

**தனி பங்காக :**

1931 முதல் 1974-ஆம் ஆண்டு வரை 43 ஆண்டுகள் பள்ளியாடி பங்கின் கிளைப்பங்காக செயல்பட்டுக் கொண்டிருந்த எமது பங்கானது 30.11.1974 அன்று கேட்டாறு மறை மாவட்ட ஆயர் மேதகு.ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களால் தனிப்பங்காக அறிவிக்கப்பட்டது. இரவிபுதூர்கடை புனித காணிக்கை மாதா ஆலயமும், மஞ்சாடி புனித சூசையப்பர் ஆலயமும் கிளைப் பங்குகளாக இணைக்கப்பட்டது.

புதிதாக உதயமான காஞ்சிரகோடு பங்கு இந்திய வேத போதக சபை (IMS) குருக்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு அருட்தந்தை.சீலாநாத் அவர்கள் முதல் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றுக் கொண்டார். பாலர் பள்ளிக்காக 5 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. ஆலய வளாகத்தில் 2.75 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. சுற்று வட்டார மக்கள் பயன்பெறும் வகையில் கிணறு ஒன்று வெட்டப்பட்டது.

1975-ல் பங்குத்தந்தை இல்லம் விரிவாக்கம் செய்யப்பட்டது. 10.01-1982 அன்று கொடிமரம் நிறுவப்பட்டது. 1985-ல் ஆலய வளாகத்தில் தையல் பயிற்சி மையம் தொடங்கப்பட்டு அதன் வழியாக பல ஏழைப்பெண்கள் தையல் கற்று பயனடைந்தார்கள்.

ஆலயத்தில் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக குருசு வடிவில் ஆலயம் விரிவாக்கம் செய்யப்பட்டு 21-02-1987 அன்று கோட்டாறுமறைமாவட்ட ஆயர் மேதகு. ஆரோக்கியசாமி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. 1988-ஆம் ஆண்டு ஆலயத்தின் ஆஸ்பெஸ்டாஸ் கூரை மாற்றப்பட்டு கான்கிரீட் கூரை அமைக்கப்பட்டது.

1984 முதல் 1994 வரை பங்கின் வளர்ச்சி திட்டங்களை பங்குத் தந்தையர்களோடு இணைந்து செயல்படுத்த பங்குப்பேரவை மறைமாவட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டது. திரு.V.தங்கையா அதை தொடர்ந்து திரு.சின்னையா மற்றும் திரு.V.ஆசீர்வாதம் ஆகிய மூவரும் ஒருவர்பின் ஒருவராக துணைத்தலைவர்களாக செயல்பட்டனர்.

1994-ஆண்டு இறையாட்சி விழுமியங்கள் வளர்ந்திட 7 அன்பியங்கள் உருவாக்கப்பட்டது. 1995-ஆம் ஆண்டு சிராயன்குழி குருசடிக்காக 10 சென்ட் இடம் வாங்கப்பட்டது.

2001-ஆம் ஆண்டு சமூக நலக்கூடம் அமைந்திருக்கும் 20 சென்ட் இடம் வாங்கப்பட்டது. வாங்கிய உடனேயே தற்காலிகமாக ஓலைக்கூரை அமைத்து திருமணங்கள், மாலை நேர டியூசன் வகுப்புகள் மற்றும் மறைக்கல்வி வகுப்புகள் நடைபெற்று வந்தன.

27-3-2002 அன்று 59.75 சென்ட் இடம் ஆலய எல்லை பகுதியின் அருகில் வாங்கப்பட்டது.

30-11-1974 ஆம் ஆண்டு தனிப்பங்காக உருவானது முதல் சுமார் 30 ஆண்டுகள் இந்திய வேதபோதக சபை குருக்களால் வழி நடத்தப்பட்ட எமது பங்கு 03-02-2003 முதல் மறைமாவட்ட குருக்களின் பொறுப்பில் வந்தது.

1-05-2005 அன்று அன்னை அரங்கத்தின் தரைத்தளம் கட்டப்பட்டது. பயிற்சிகள் நடத்துவதற்காக ஒரு பயிற்சி மையம் கட்டப்பட்டது. இந்திய வேதபோதக சபையிடமிருந்து பிலாவிளையில் நமது ஆலயத்திற்கு சொந்தமாக 24 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. 29-04-2006 அன்று மேதகு ஆயர் லியோண் தர்மராஜ் ஆண்டகையின் அனுமதியுடன் பிறரன்பு சகோதரிகள் சபையை சார்ந்த சகோதரிகளால் மாலை நேர வகுப்புகள், ஆங்கில பயிற்சி, மழலையர் வகுப்பு போன்ற சமூக பணிகளையும், இறைப்பணியையும் செய்தார்கள். பங்குத்தந்தை இல்லத்திற்கு தெற்கு பக்கம் ஆலயத்திற்கென்று 2.5 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. பிலாவிளை பகுதியில் கல்லறை தோட்டத்திற்கென்று திரு.ஜாண்சன் என்பவரிடமிருந்து 1 சென்ட் இடம் இனாமாகப் பெறப்பட்டது. இக்காலத்தில் எமது ஆலய வளாகத்தில் மறைமாவட்ட குடும்ப நலப் பணிக்குழு, திருமண தகவல் மையம், திருமண முன் தயாரிப்பு பயிற்சிகள், புது வசந்தம் போன்ற மறைமாவட்ட பயிற்சி மையங்கள் செயல்பட்டன.

21-10-2008 அன்று சிராயன்குழி புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காஞ்சிரகோடு பங்கின் கிளைப்பங்காக அங்கீகரிக்கப்பட்டது.

2010-ஆம் ஆண்டு ஆலயத்திற்கென்று 6.25 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. ஆலய பீடம் புதுப்பிக்கப்பட்டது. அன்னை அரங்கின் மேல்தள கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

2011 -ஆம் ஆண்டு அரங்கின் மேல்தளம் கட்டி முடிக்கப்பட்டு மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2013 - ஆம் ஆண்டு பங்கின் பொருளாதார வசதிக்காக ஒருநாள் ஊதியம் என்ற திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டது. ஏழைகள் நிதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆலய வளாகத்தில் அருட்பணிப் பேரவை அலுவலகம் அமைக்கப்பட்டது. ஆலயத்தை சுற்றிலும் இண்டர்லாக் போடப்பட்டது. பிலாவிளையில் ஆலயத்திற்கு சொந்தமான இடத்தில் புனித ஜெபமாலை அன்னை மேய்ப்புபணி அலுவலகம் கட்டப்பட்டது. திருவிழாவின் போது நடைபெறும் ஜெபமாலை அன்னையின் தேர்பவனியை சிறப்பிப்பதற்காக ஆலயத்திற்கென்று அழகிய தேர் ஒன்று உருவாக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு எமது தலத்திருச்சபையின் ஆலய நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்பியங்கள் மறுசீரமைக்கப்பட்டு 10 அன்பியங்கள் உருவாக்கப்பட்டன. ஆலயம் கட்டப்பட்டு நூற்றாண்டு விழா நினைவாக புதிய பங்கு தந்தை இல்லம் கட்டப்பட்டு 08-09-2017 அன்று மேதகு ஆயர் ஜெரோம்தாஸ் வறுவேல் SDB அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காஞ்சிரகோடு பங்கின் கிளைப்பங்கான மஞ்சாடி 06-08-2017 அன்று தனிப்பங்காக உயர்த்தப்பட்டு இரவிபுதூர்கடை அதன் கிளைப்பங்காக இணைக்கப்பட்டது.

18-02-2017 அன்று திருச்சிலுவை கன்னியர் இல்லம் ஏற்படுத்தப்பட்டு மருத்துவ சேவைக்காக மருத்துவ சிகிட்சை மையம் ஒன்றும் அமைக்கப்பட்டு மேதகு ஆயர். ஜெரோம்தாஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

லூர்து மாதா கெபி கட்டப்பட்டு 05-02-2018 அன்று குழித்துறை மறை மாவட்ட முதன்மை அருட்பணியாளர்கள் ஜேசு ரெத்தினம் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

17-05-2019 அன்று பழைய சிறிய குருசடி மாற்றியமைக்கப்பட்டு புதிய 5 மாடி குருசடி கட்டப்பட்டு மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. குழந்தைகளின் கலை ஆர்வத்தை வளர்க்கும் விதமாக 22-02-2020 அன்று றோசறி இன்ஸ்டியூட் ஆப் பைன் ஆர்ட்ஸ் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

புதிய ஆலயம் கட்ட வேண்டும் என்ற பல ஆண்டு கனவு நிறைவேற அதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டு 10-12-2023 அன்று மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ் அவர்களால் புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு வழிபாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு தற்காலிக ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

பங்கிற்குட்பட்ட பிலாவிளை என்னும் இடத்தில் புனித ஆரோக்கிய அன்னைக்கு குருசடி ஒன்று கட்டப்பட்டு 08-05-2025 அன்று குழித்துறை மறைமாவட்ட முதன்மை அருட்பணியாளர் பேரருட்பணி.சேவியர் பெனடிக்ட் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

13-10-2024 அன்று தனிபங்கான பொன்விழா ஆண்டு நிறைவடைந்ததையொட்டி அதன் நினைவாக அலங்கார வளைவு அமைக்க நமது குழித்துறை மறைமாவட்ட ஆயர் மேதகு. ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. 16/04/2025 அன்று கல்லறைத்தோட்டம் உருவாக்கப்பட்டது

## இன்றைய நிலை

28-05-2025 அன்று முதல் அருட்தந்தை.அ.மைக்கேல்ராஜ் அவர்கள் பங்கின் பணிப்பொறுப்பை ஏற்று, புதிய ஆலய பணிகள் நடைபெற முயற்சி எடுப்பதோடு எம்மை சீரும் சிறப்புமாக வழி நடத்தி வருகிறார்கள்.

தற்போது எமது பங்கு 10 அன்பியங்களையும் 350 குடும்பங்களையும், 1600 க்கும் மேற்பட்ட மக்களையும் கொண்டு பல்வேறு பங்கேற்பு அமைப்புகளுடன் அருட்பணியையும் மக்கள் நலப்பணியையும் ஆற்றி சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**பங்கிலிருந்து உருவான அருட்பணியார்கள்**

1. அருட்பணி.ஹென்றி ஏஞ்சல் SAC
2. அருட்பணி.வென்சஸ் ஜார்ஜ் SAC
3. அருட்பணி. ஹென்றி பிரைட் CPPS

**அருட்சகோதரிகள்**

1. அருட்சகோதரி.மரிய நோபர்த்தா
2. அருட்சகோதரி.ஞானபிரகாசியா
3. அருட்சகோதரி.பெல்லாமேரி DM
4. அருட்சகோதரி.செலின்மேரி SS
5. அருட்சகோதரி.பிலோமின் மேரி
6. அருட்சகோதரி.குழந்தை தெரசாள்
7. அருட்சகோதரி.ஆக்னஸ் பிளாசிட்டா SMI
8. அருட்சகோதரி.பாத்திமா ஜெசிந்தா
9. அருட்சகோதரி.மேழ்சி
10. அருட்சகோதரி.சுபைதா SS
11. அருட்சகோதரி.ஜெயா FC

**பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்கள்**

1. 1974 - 1984 - அருட்தந்தை.சீலாநாத்
2. 1984 - 1988 - அருட்தந்தை.ரூபன்
3. 1988 - 1994 - அருட்தந்தை.ரஞ்சன்
4. 1994 - 1998 - அருட்தந்தை.அமர்தீப்
5. 1998 - அருட்தந்தை.சஜீவ்
6. 2000 - 2001 - அருட்தந்தை.விமல்
7. 2001 - 2002 - அருட்தந்தை.அமர்நாத்
8. 2003 - அருட்தந்தை.மரியசூசை வின்சென்ட்
9. 2003 - 2007 - அருட்தந்தை.மரியதாசன்
10. 2007 -2008 - அருட்தந்தை.ஜாண் அகஸ்டஸ்
11. 2008 - 2011 - அருட்தந்தை.ஜோக்கிம்
12. 2011 - 2015 - அருட்தந்தை.வற்கீஸ்
13. 2015 - 2019 - அருட்தந்தை.அருளப்பன்
14. 2019 - 2024 - அருட்தந்தை.அருள்
15. 2024 - 2025 - அருட்தந்தை.பெனிட்டோ
16. 2025 - அருட்தந்தை. அ.மைக்கேல் ராஜ்